# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.89/2025**

| Deposition of Name | சீனிவாசன் SSI-264 | Prosecution | P.W-2 . LW-4 |
|---|---|---|---|
| Father Name | வேணுப்பிள்ளை | Defence | |
| Police Station | வைத்தீஸ்வரன்கோயில் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 52/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**11.03.2026.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்து உதவி ஆய்வாளர் வீரமணி அவர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.02.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் வைத்தீஸ்வரன் கோயில் உதவி ஆய்வாளர் வீரமணி அவர்களுடன் நானும் தலைமை காவலர்கள் கண்ணன் மற்றும் மோகன்ராஜ் என்பவர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக மானந்தெரு வாசல் பகுதியில் கண்காணித்து வந்த போது காலை 11.10 மணியளவில் பின்னர் பெயர் விலாசம் தெரிந்த எதிரிகள் 1. துர்கா க/பெ.வினோத், 2. சிவசங்கரி க/பெ.சிவராஜ் இருவரும் எங்களை எங்களை கண்டதும் தப்பித்து ஓட முற்பட்டவரை மடக்கி பிடித்து விசாரித்து அவர் நின்றிருந்த இடத்தை சோதனை செய்தபோது தலா 60 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலிதின்பையில் தலா 55 மில்லி லிட்டர் வீதம் மொத்தம் 110 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தார். அதனை அவர் வைத்திருப்பதற்கு எவ்வித அனுமதியோ உரிமமோ இல்லாததால் குற்ற காரணம் கூறி அதே இடத்தில் 11.30 மணிக்கு கைது செய்து பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் மேற்கண்ட

போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் 11.30 மணிக்கு மசரில் கைப்பற்றினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–1 ஆக** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 11.40 மணிக்கு மேற்கண்ட அதே சாட்சிகள் முன்னிலையில் 32 TNP Actன் படி அழிப்புமகசர் தயார் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் **அழிப்பு மகசர் அ.சா.ஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகளை கைது செய்து 12.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து வைத்தீஸ்வரன்கோயில் காவல்துறை குற்ற எண். 33/2024 4(1)(aaa) TNP Actன் கீழ் வழக்கினை பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் வீரமணி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைது செய்யபட்ட எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் கடந்த 06.04.2024 ம் தேதி இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக 4(1)(aaa) TNP Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரியும் என் உயர் அதிகாரிகள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கின் கைப்பற்றுதல் மகசர், அழிப்பு மகசர் சாட்சிகள் நாங்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாராயத்தை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கையின்றி எதிரி விற்றதாக சொல்லப்படுவது சாராயமா என்பது தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரரும் விசாரணை அதிகாரியும் என் உயர் அதிகாரிகள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**